# True Disciple

# உண்மை சீஷன்

November - December 2019 நவம்பர் - டிசம்பர்

A Bi-Monthly News Bulletin of City Revival AG Church



**அல்லேலூயா! கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்.**

சங்கீதம் 106:1

**Praise the Lord!**
**Give thanks to the Lord, for He is good.**

# கர்த்தரைத் துதியுங்கள்

– பாஸ்டர். **ஜெரி டேனியல்**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! நாம் சேவிக்கும் ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்து துதிக்கும் ஆராதனைக்கும் பாத்திரர் (சங். 18:3). அவர் நம்மை துதிப்பதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார். தேவன் சொன்னார், 'இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். அவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்' (ஏசாயா 43:21). நாம் தேவனை துதிக்கும் போது, தேவன் யார் என்றும் அவர் நம் வாழ்வில் என்ன செய்திருக்கிறார் என்றும் அறிக்கைப் பண்ணுகிறோம். கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும் (சங். 34:1) என்றும், என் நாவு நாள் முழுதும் உமது துதியை சொல்லி கொண்டிருக்கும் (சங். 35:28) என்றும் சங்கீதக்காரனாகிய தாவீது கூறுவதை வேதத்தில் வாசிக்கிறோம். துதியில் வல்லமை இருக்கிறது. துதி நம் வாழ்வில் கொண்டுவரும் ஆசீர்வாதங்கள் சிலவற்றை வேதத்திலிருந்து எடுத்துக் கூற விரும்புகிறேன்.

## 1. துதி வெற்றியை கொண்டுவருகிறது
**Praise BRINGS Victory**

துதி ஆராதனை நாம் வாழ்வில் வெற்றியை கொண்டுவருகிறது. தேவன் துதியின் மத்தியில் வாசம் பண்ணுகிறார் (சங். 22:3). நாம் அவரை துதித்து ஆராதிக்கும் போது, தேவப் பிரசன்னம் நம் மத்தியில் இறங்கி நாம் சந்திக்கும் ஒவ்வொரு இக்கட்டுகள், பிரச்சனை களிலிருந்தும் நமக்கு வெற்றியை பெற்றுத் தருகிறது. யோசபாத் ராஜாவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண சத்துருக்களின் சேனை திரளாய் வந்தபோது, யோசபாத் தன்னுடைய இடுக்கணில், தன்னுடைய ஜனங்களோடு தேவனை நோக்கிக் கூப்பிட்டான். தேவன் அவர்களுடைய சத்தத்தைக் கேட்டு தீர்க்கதரிசி மூலமாக 'பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள். இந்த யுத்தம் கர்த்தருடையது' என்று கூறி பதிலளித்தார். இதன் விளைவாக ஜனங்கள் தைரியமாக யுத்தத்திற்கு துதியின் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். 'கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, சத்துருக்களை ஒருவருக்கு விரோதமாக ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள் (2 நாளா. 20:19-26). இதைப் போன்றதான வெற்றியை தேவன் நமக்கும் தர விரும்புகிறார். நாம் துதிக்கும்போது தேவன் நமக்காக எழுந்தருளி நம்மை விழச்செய்ய, தோற்கடிக்க விரும்பும் சத்துருவின் பொல்லாத சேனைகளை சிதறடிப்பார். நமக்கு ஜெயத்தைத் தருவார். துதியாகிய ஆயுதத்தை பயன்படுத்தி தினமும் ஜெயம் பெறுவோம்!

## 2. துதி தடைகளை அகற்றுகிறது
## Praise BREAKS the Barriers

துதி நம்முடைய வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கும் அனைத்து காரியங்களையும் உடைத்தெறிகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தை சுதந்தரிக்க போகிற வழியில் எரிகோ பட்டணத்தின் அலங்கங்கள் அவர்களுக்கு தடையாக இருந்தது. அப்பொழுது கர்த்தர் அவர்களை நோக்கி, ஆறு நாள் பட்டணத்தை சூழ்ந்து பட்டணத்தைச் சுற்றி வாருங்கள். ஏழாம் நாளில் பட்டணத்தை ஏழு தரம் சுற்றி வந்து மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரியுங்கள். அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழும் (யோசு. 6:1-5) என்று கூறினார், அதற்கு கீழ்ப்படிந்த ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது தடையாக நின்ற அலங்கம் இடிந்து விழுந்தது (யோசு. 6:20). நாம் கர்த்தரைப் பாடி துதித்து ஆராதிக்கும் போது நம்முடைய வாழ்க்கையில் வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க தடையாய் இருக்கும் அனைத்து சுவர்களும் தரைமட்டமாகும் நம்முடைய கர்த்தர் தடைகளை நீக்கி போடுகிறார் (மீகா 2:13). கர்த்தரை நாம் கெம்பீரமாய் பாடி அவரை ஆர்ப்பரித்து துதிக்கும்போது நம்முடைய வாழ்வில் இருக்கும் மலை போன்ற தடைகள் அனைத்தும் மெழுகு போல உருகி மறைந்துவிடும் (சங். 95:1, 2 - 97:1-5). அல்லேலூயா.

## 3. துதி விடுதலை அளிக்கிறது
## Praise BEGETS Freedom

துதி ஆராதனை நம்முடைய வாழ்வில் உள்ள அனைத்து கட்டுகளிலிருந்து நமக்கு விடுதலை அளிக்கிறது. பவுலும், சீலாவும் அநேக அடிகள் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தனர். அவர்களுடைய வலி மற்றும் கட்டுகள் மத்தியிலும் தேவனை அவர்கள் துதித்துப் பாடின போது தேவன் அவர்களை அற்புதமாக விடுதலை யாக்கினார் (அப். 16:23-26). தங்களுடைய வேதனை, பாடுகளின் நிமித்தம் தேவனுக்கு விரோதமாக அவர்கள் முறுமுறுக்கவில்லை. மேலும் தேவன் அவர்களை விடுதலையாக்கும் மட்டும் அமைதியா யிருக்கவும் இல்லை. தங்கள் கட்டுகளின் மத்தியில் தேவனைத் துதித்தார்கள், அற்புதத்தைப் பெற்றுக்கொண்டார்கள். நாமும் பாடுகள், கட்டுகள் மத்தியில் தேவனைத் துதிக்கும் போது, தேவன் அற்புதமாக இறங்கி வந்து நம்மை விடுவிப்பார். யோனா மீனின் வயிற்றில் இருக்கும்போது முறுமுறுத்து கசந்து கொள்ளாமல் தேவனிடம் தன்னுடைய சிந்தனையைத் திருப்பி அவரை நோக்கி ஜெபித்து அவருக்கு துதி பலி செலுத்தினான். அப்பொழுது கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டு யோனாவை கரையில் கக்கி விட செய்தார் (யோனா 2:7-10). ஆம், நம்முடைய துதி நமக்கு இடுக்கண் மற்றும் கட்டுகளிலிருந்து விடுதலை கொண்டுவரும்.

## 4. துதி பொல்லாத ஆவிகளை விரட்டி அடிக்கிறது
## Praise BANISHES Evil Spirits

துதி பொல்லாத ஆவிகளை விரட்டி அடிக்கும். ராஜாவாகிய சவுலை பொல்லாத ஆவி கலங்கப்பண்ணும்போது, சுர மண்டலம் வாசிக்கிறதில் தேறின தாவீதை அவன் முன் கொண்டுவருவார்கள். தாவீது தேவனை ஆராதிக்கிறவன். அவன் சுரமண்டலத்தை எடுத்து ஆராதிக்கும்போது பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்க அவன் ஆறுதலைந்து சொஸ்தமாவான் என்று வேதம் கூறுகிறது (1 சாமு. 16:14-23). நாம் துதியின் ஆடை அணிந்துக் கொள்ளும் போது துயரத்தின் ஆவி நம்மை விட்டு நீங்கி போகும் (ஏசாயா 61:3). துக்கமும், துதியும் ஒரே இருதயத்தில் வாசம் பண்ண முடியாது. நாம் தொடர்ந்து துதியை இருதயத்தில் அணிந்துக்கொள்ளும் போது, துக்கம், துயரம், நம்பிக்கை இல்லாமை, ஒடுங்கி போகுதல், அவிசுவாசம், பயம் இவைகளை கொண்டுவரும் பொல்லாத ஆவிகள் நம் இருதயத்திலிருந்து விரட்டி அடிக்கப்படும். நமக்குள் ஆறுதலும் விசுவாசமும் உண்டாகும். அல்லேலூயா!



## எண்ணி எண்ணித் துதி செய்

ஒரு ஏழை சிறுமி இருந்தாள். அவள் பெற்றோர் மிகுந்த வறுமையில் வாடுபவர்கள். சிறுமி தன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றபோது, மற்றவர்களைப் போல அவளுக்கு காலணிகள் (Shoe) இல்லாததினாலே அவள் தேம்பித் தேம்பி அழுதாள். எனக்கு காலணி வாங்கித் தராவிட்டால் நான் பள்ளிக்கூடம் செல்வதில்லை என்று அடம்பிடித்தாள்; முறுமுறுத்தாள். காலணி இல்லையே என்று தேம்பி அந்த மகள், கடைசியில் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு போய்விட்டாள்.

அங்கே ஊருக்கு வெளியே அவள் ஒரு மகிழ்ச்சியான, துதிக்கிற மனிதனை சந்தித்தாள். ஆனால் அவனுக்கோ இரண்டு கால்களும் இல்லை. சப்பாணியாய், மிகவும் கஷ்டப்பட்டு, ஊர்ந்துக்கொண்டே சூம்பிப்போயிருந்த தன் கால்களை இழுத்துக் கொண்டு வந்தான்.

சிறுமி அவன் கால்களைப் பார்த்தாள். தன் கால்களையும் பார்த்த அவள் முறுமுறுப்பு போய்விட்டது. கால்களற்ற மனிதனைக் கண்டதும், காலணிக்காக அழுவதை விட்டுவிட்டேன் என்றாள் அந்த சிறுமி.

தேவபிள்ளைகளே, முறுமுறுக்கும் எண்ணம் வரும்போது ஓடிச்சென்று முழங்கால்படியிட்டு, தேவன் உங்களுக்குச் செய்த எண்ணில்லாத நன்மைகளை ஒவ்வொன்றாய் நினைத்து ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் எவ்வளவு பாக்கியவான் என்பதை அறிந்துகொள்வீர்கள்.

# இது ஒரு கிறிஸ்துமஸ் காலம்



உலகம் முழுவதும் ''கிறிஸ்துமஸ்'' மிகுந்த சந்தோஷத்தோடும், ஆரவாரத்தோடும் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துமஸ் ஒரு பரபரப்பான காலம். புதிய ஆடைகள், சுவை மிக்க உணவு, கேக், இசை, பாடல்கள், கொண்டாட்டம், பரிசுகள், வீடுகள் தோறும் அலங்கார நட்சத்திரங்கள் என காணப்படுகிற காலமாக விளங்குகிறது. நல்லது! கிறிஸ்துமஸ் காலம் போல எந்தக் காலமும் இவ்வளவு மகிழ்ச்சி தருவதில்லை. ஆனால் வேதாகமத்தில் நாம் பார்க்கும் முதல் கிறிஸ்துமஸ் சற்று வித்தியாசமானது. அது குறித்து சற்று தியானிப்போம். அதை நாமும் பின்பற்றுவோம்.

## 1. கிறிஸ்துமஸ் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய காலம் It is a time of GLORIFYING

இயேசுவின் பிறப்பு, பரலோகத்தையும், பூலோகத்தையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. பரம சேனையின் திரள், “உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை” என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:13). ஞானிகள் மிகுந்த சந்தோஷத்தினால் நிரம்பி, இயேசுவைப் போற்றி, ஆராதித்து அவரைப் பணிந்துக் கொண்டார்கள் (மத்தேயு 2:10, 11). சிமியோன் இயேசுவைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்தான் (லூக்கா 2:27, 28). விதவையான அன்னாள் இயேசுவைப் பார்த்தபோது கர்த்தரைப் புகழ்ந்தாள் (லூக்கா 2:38). தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவரைத் துதிக்க வேண்டும் (2 கொரி. 9:15). இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம் இருதயம் தேவனைத் துதிப்பதிலும், நன்றி சொல்லுவதிலும், ஆராதிப்பதிலும் நிறைந்திருக் கட்டும்! நம்முடைய ஆத்துமா அவரை மகிமைப்படுத்தி, நம்முடைய ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூரட்டும் (லூக்கா 1:46-47).

## 2. கிறிஸ்துமஸ் ஒரு கொடுத்தலின் காலம் It is a time of GIVING

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை நமக்காகத் தந்தருளினார் (யோவான் 3:16). குமாரனாகிய இயேசு, நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார் (மத்தேயு 20:28). இப்படி தம்மையே நமக்காக தந்து அன்பு கூர்ந்த இயேசுவுக்கு நம்மையே அவருக்குக் கொடுப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்! உங்கள் இருதயத்திலும் வாழ்க்கையிலும் அவருக்கு இடம் கொடுங்கள் (நீதி. 23:26; வெளி. 3:20). அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ தீர்மானியுங்கள் (2 கொரி. 6:2)!

மேலும், ஏழைகளுக்கும் திக்கற்றோருக்கும் உதவி செய்கிற நாட்களாக இந்த கிறிஸ்துமஸ் நாட்கள் மாறட்டும். நம்முடைய சம்பளத்தைக் குறையுள்ளவர்களுக்கு பகிர்ந்தளிப்போம்! நீங்கள்

விருந்து செய்யும் போது தரித்திரரையும், முடவர்களையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைத்து உபசரியுங்கள். அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்று இயேசு சொன்னார். நீதிமான்கள் உயிர்தெழுதலில் அதின் பலனைப் பெறுவீர்கள் (லூக்கா 14:12-14). ஆகவே தரித்திரரை நினைத்துக்கொள்ளுவோம் (கலா. 2:10). இப்படிப்பட்டவர்களை ஆதரிப்போருக்கு ஆசீர்வாதம் நிச்சயம் என்று வேதம் கூறுகிறது (சங். 41:1-3; 112:9).

### 3. இது நற்செய்தி அறிவிக்கும் காலம்
### It is a time of GOOD NEWS

கிறிஸ்துமஸ், எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோத்தை உண்டாக்கும் நற்செய்தி (லூக்கா 2:10). இயேசுவின் பிறப்பின் நற்செய்தியை தூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். மேய்ப்பர்கள் தாங்கள் கேள்விப்பட்ட செய்தியை அனைவருக்கும் பிரசித்தம் பண்ணினார்கள் (லூக்கா 2:17). தேவ ஜனமே, இன்று நாம் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து பேசுகிறோம். ஆனால் நம் தேசத்தில் இன்று அநேகருக்கு அவரின் முதல் வருகையை பற்றியே தெரியவில்லை. இயேசு இந்த உலகிற்கு மனிதனாக வந்த நோக்கத்தையும், அவர் நமக்காக சிலுவையில் செய்து முடித்த காரியத்தையும் இந்த உலகிற்கு எடுத்துரைப்பது நம்முடைய தலையாயக் கடமையாகும்! ஒரு சிலருக்காவது இயேசுவைக் குறித்து இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், அயலகத்தார், அண்டை வீட்டார் ஆகியோருக்கு இயேசுவை அறிமுகம் செய்யுங்கள். அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? (ரோமர் 10:14) என்று வேதம் கூறுகிறது. இயேசுவை அறிய ஆவலாய் இருப்போரை சபைக்கு அழைத்து வாருங்கள். இயேசு பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கும் காலமாக இந்த 2019 கிறிஸ்துமஸ் நாட்கள் அமையட்டும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!


## Deliverance Fasting Prayer - விடுதலை உபவாச ஜெபம்

**இரண்டாம் சனிக்கிழமை**

**காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை**

**நவம்பர் 09**
தேவ செய்தி
பாஸ்டர். **ஜோசப் டிகால்**
(தேவக்கோட்டை)

**டிசம்பர் 14**
தேவ செய்தி
பாஸ்டர். **ஜான் சைலம்**
(தூத்துக்குடி)

**பாவம், சாபம், வியாதி, கடன், பில்லிசூனியம் ஆகிய கட்டுகளிலிருக்கிறவர்களை அழைத்து வாருங்கள். இயேசு அற்புதம் செய்வார்! இயேசு விடுதலை தருவார்!**

## விசேஷ தினங்களும் ஜெபக்குறிப்புகளும்

1. **நவம்பர் 10 - உலக அறிவியல் தினம்** (World Science Day for Peace and Development)
அறிவியல் ஆராய்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியும் பெருகி வரும் இக்காலத்தில் விஞ்ஞானம் மக்களுக்கு சமாதானத்தையும், வளர்ச்சியையும் கொடுக்க ஜெபிப்போம்.

2. **நவம்பர் 11 - தேசிய கல்வி தினம்** (National EducationDay)
இந்தியாவில் கல்வியறிவு பெறாத 35%ற்கும் அதிகமாக மக்களுக்காக ஜெபிப்போம்.

3. **நவம்பர் 14 - உலக நீரழிவு தினம்** (World Diabetes Day)
உலகளவில் 36.6 கோடி மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர். இக்கொடிய வியாதியிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்க ஜெபிப்போம். வருகிற 2030ம் ஆண்டு இந்த எண்ணிக்கை இருமடங்காக உயரும் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. நோயின் காரணங்களை அறிந்து மக்கள் விழிப்பாய் செயல்பட ஜெபிப்போம்.

4. **நவம்பர் 14 - குழந்தைகள் தினம்** (India's Children Day)
இந்தியாவில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றிற்காக ஜெபிப்போம். இந்தியாவில் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 22 கோடி சிறுபிள்ளைகளில் 10.5 கோடி சிறுபிள்ளைகள் மாத்திரமே பள்ளிக்குச்செல்கின்றனர். இந்நிலை மாற ஜெபிப்போம். பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளில் 5.75 இலட்சம் சிறுமிகள் விபச்சாரத் தொழிலில் உள்ளனர். இந்நிலை மாற ஜெபிப்போம். சரியான உணவு இல்லாமை, ஊட்டச்சத்து குறைவு, குறைவான மருத்துவ வசதி போன்ற காரணங்களினால் அநேக குழந்தைகள் மரித்துப்போகின்றன. இந்நிலை மாற ஜெபிப்போம்.

5. **நவம்பர் 14 - உலக பெண் குழந்தை தினம்** (International Girls Day)
பெண் குழந்தைகளுக்கு எதிரான செயல்கள், வன்முறைகள், குற்றங்கள் நடைபெறாமலிருக்க ஜெபிப்போம். வேலை செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம். பெண் குழந்தைகள் எதிர்பார்க்கும் அன்பு, தங்கள் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்து கிடைக்க ஜெபிப்போம்.

6. **நவம்பர் 16 - உலக சகிப்புத்தன்மை தினம்** (International day of Tolerance)
உலக மக்களிடையே சகிப்புத்தன்மை, மனித நேயம் வளர ஜெபிப்போம்.

7. **நவம்பர் 19 - உலக கழிப்பறை தினம்** (World Toilet Day)
உலகளவில் 250 கோடி மக்கள் போதுமான கழிப்பறை வசதி இன்றி உள்ளனர். இந்த அடிப்படைத் தேவை சந்திக்கப் பட ஜெபிப்போம்.

8. **நவம்பர் 19 - உலக ஆண்கள் தினம்** (International Men's Day)
கிறிஸ்தவ ஆண்களின் ஒழுக்கம், முன்மாதிரியான வாழ்க்கைக்காக ஜெபிப்போம்.

9. **டிசம்பர் 1 - உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம்** (World AIDS Awareness Day)
தற்பொழுது உலகளவில் 40 கோடி மக்கள் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் முற்றிலும் தடுக்கப்படும்படி ஜெபிப்போம். இந்தியாவில் 4.58 கோடி மக்களும், தமிழகத்தில் 8 - 10 இலட்சம் மக்களும் எயிட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். தேசத்தில் பாலுணர்வு வாழ்வில் பரிசுத்தம் காணப்பட ஜெபிப்போம்.

10. **டிசம்பர் 2 - உலக மாசு கட்டுப்பாட்டு தினம்** (World Pollution Prevention)
சுத்தமற்ற தண்ணீரினால் ஒவ்வொரு நாளும் உலகளவில் 14,000 மக்கள் உயிரிழக்கின்றனர். சுற்றுப்புறத் தூய்மையில் நாடு வளர ஜெபிப்போம். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 1000 குழந்தைகள் வயிற்றுப்போக்கு நோயினால் மரிக்கின்றனர். சுத்தமான உணவு வசதி கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

11. **டிசம்பர் 2 - உலக அடிமைத்தன ஒழிப்பு தினம்** (International Day for Abolition of Slavery)
பெண் பிள்ளைகளைக் கடத்தியும், விற்றும் அடிமைப்படுத்தும் நிலை இந்தியாவில் மறைய ஜெபிப்போம். 5 முதல் 14 வயதுடைய 7 இலட்சம் குழந்தைகள் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் விற்கப்படுகின்றனர். பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

12. **டிசம்பர் 3 - உலக ஊனமுற்றோர் தினம்** (World Disabled Day)
ஆய்வின்படி உலகளவில் 65 கோடி மக்கள் ஊனமுற்று உள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள். தமிழகத்தில் மனவளர்ச்சி குன்றியுள்ள 5 இலட்சம் மக்களுக்காக ஜெபியுங்கள்.

13. **டிசம்பர் 9-உலக லஞ்ச ஒழிப்பு தினம்** (International Anti-Corruption Day)
லஞ்சம், ஊழல், சட்டம் அவமதித்தல் போன்ற காரியங்கள் மறைய ஜெபியுங்கள்.

14. **டிசம்பர் 10 - மனித உரிமைகள் தினம்** (Human Rights Day)
மனிதனுக்குத் தேவையான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படாமல் வழங்கப்பட ஜெபியுங்கள். கட்டாய கல்வி உரிமையை அனைவரும் பயன்படுத்த ஜெபியுங்கள்.

15. **டிசம்பர் 14 - இந்திய கடற்படை தினம்** (Indian Navy Day)
இன்று கொண்டாடப்படும் கடற்படை தினத்தில், நம் கடல் பகுதிகளைப் பாதுகாக்கும் வீரர்களுக்காக ஜெபியுங்கள்.

16. **டிசம்பர் 25 - கிறிஸ்துமஸ் தினம்** (Christmas Day)
கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி நம் பட்டணத்திலும், தேசத்திலும் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

## நன்றி செலுத்தும் ஞாயிறு - Thanks giving Sunday

**நவம்பர் 24 - November 24**



**சிறப்பு துதி நன்றி மாலை**
**Evening of Praise & Worship**

**மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை**

# நன்றி அறிதல் உள்ளவர்களாய் இருப்போம்

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்"* எபேசியர் 5 : 20.

நாம் நன்றி சொல்பவர்களாய் இருந்தால் நம்முடைய வாழ்க்கையே ஒரு மாறுபட்ட வாழ்க்கையாய் இருக்கும். நாம் தாழ்மை உள்ளவர்களாய் நன்றி சொல்பவர்களாய் இருக்க வேண்டும். நாம் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் நன்றி செலுத்தும் வாழ்க்கை வாழ தேவன் விரும்புகிறார். நம்முடைய சுயசக்தியோ, சுயபக்தியோ நம் வாழ்க்கையில் நன்மைகளைத் தருவதில்லை. தேவனே எல்லாவற்றிற்கும் காரணராயிருக்கிறார்.

சங். 34:1-ல் "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்" என்று கூறுகிறார். வருடத்தில் ஏதோ ஒருநாள் மட்டும் நன்றி சொன்னால் போதாது. ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஜெபத்தோடு தேவனுக்கு நன்றி கூறுவதையும் செய்ய வேண்டும். நம்முடைய வாழ்க்கையின் நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலேயும் நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மிடம் ஒன்றும் இல்லாத சூழ்நிலையிலும், தேவன் நம்மோடு இருப்பதால் நாம் நன்றி கூற வேண்டும். தேவன் நமக்கு அளித்திருக்கும் குடும்பத்திற்காக, ஆரோக்கியத்திற்காக, உணவிற்காக, தண்ணீருக்காக மற்றும் எல்லாவற்றிற்குமாக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

ரோமர் 8:28 "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என சொல்கிறது. நாம் விரும்பாத காரியங்கள் நம் வாழ்க்கையில் நடந்தாலும் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ஏனெனில், நம்முடைய பிரச்சனைகளைப் பார்க்கிலும் தேவன் மிகவும் பெரியவராயிருக்கிறார். தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்கள் எப்பொழுதும் அவருக்கு நன்றி கூறுபவர்களாய் இருப்பார்கள்.

சந்தோஷமாய் இருப்பவர்கள் எப்பொழுதும் நன்றி உள்ளவர்களாய் இருப்பார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு நன்றி கூற வேண்டும் என்ற வசனங்களை எபேசியர் நிரூபத்தில் எழுதும்போது, அவர் சிறைச்சாலையில் இருந்தார். ஆனால் அவருக்கு அது அரண்மனை போல் இருந்தது. ஆனால் நன்றி சொல்லாதவர்கள் அரண்மனையில் இருந்தாலும், அது அவர்களுக்கு சிறைச்சாலை போலத்தான் இருக்கும். எனவே நன்றி கூறுதல் நம் வாழ்க்கையையே மாற்றிவிடும்.

எபேசியர் 5:18 "ஆவியினால் நிறைந்து" என சொல்கிறது. நீங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை வாழ்பவர்களாய் இருந்தால், தேவனோடு நல்ல ஐக்கியம் உள்ளவர்களாய் இருந்தால், நன்றி உள்ள வாழ்க்கை வாழ்வோவீர்கள். பரிசுத்த ஆவியானவரின் உதவி இதற்கு கட்டாயமாய் நமக்கு தேவை. நாம் பவுலைப்போல சிறைச்சாலையில் இல்லாவிட்டாலும், நாம் சுகமாய் வாழ்வை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், நாம் மாறுபட்ட வாழ்க்கை வாழ நமக்கு நன்றி கூறும் இதயம் தேவை. பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் நாம் நன்றி உள்ள வாழ்க்கை வாழ்ந்தால், நம்முடைய வாழ்வில் கசப்பு உணர்ச்சி, பயம், சுயபச்சாதாபம், நன்றியில்லா தன்மை, எதிர்மறையான சிந்தனை போன்றவை எல்லாம் இல்லாமல் போய் விடும். வேதம் கூறுகிறபடி "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்". அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச. 5:18).

**- Mr. T.R. பாஸ்கரன்**

# கிறிஸ்துமஸ் குடும்ப ஐக்கியக் கூடுகை

வருட இறுதி கிறிஸ்துமஸ் சிறப்பு குடும்ப கூடுகை டிசம்பர் **1, 8, 22** ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை **6.00** மணி முதல் **8.00** மணி வரை நடைபெறும். (3 பகுதிகளாக பிரித்து நடைபெறும்).

**கிறிஸ்துமஸ் பாடல்கள், சாட்சிகள், ஐக்கிய நேரம், திருவிருந்து மற்றும் இரவு உணவும் உண்டு.**

## CHRISTMAS FAMILY GET-TOGETHER

**Sundays - December 1, 8 and 22 - Evening 6.00 pm to 8.00 pm**

**There will be Christmas Songs, Testimonies, Family Fellowship , Communion and Dinner**

**டிசம்பர்**
**14, 15**
சனி, ஞாயிறு
மாலை 6.00 மணி

# விடுதலைப் பெருவிழா

இடம்

## சிட்டி ரிவைவல் ஏ.ஜி.சர்ச்

ஜென்னி பிளாசா, கண்டோன்மென்ட்,
திருச்சி – 1



**தேவ செய்தி**

பாஸ்டர். **ஜான் சைலம்**
(தூத்துக்குடி)

**இயேசு கிறிஸ்து அருளும் விடுதலை, சுகம் , சமாதானம், ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் அழைக்கின்றோம்!**

*நண்பர்கள், உறவினர்களை அழைத்து வாருங்கள்!*

## கர்த்தரை எப்படித் துதிக்க வேண்டும்?

1. அனுதினமும் – 2 நாளாகமம் 30:21
2. எப்பொழுதும், எக்காலத்திலும் – சங்கீதம் 71:6; 34:1
3. உயிருள்ளமட்டும் – சங்கீதம் 104:33; 115:17
4. முழு இருதயத்தோடு – சங்கீதம் 9:1
5. உதடுகளினால் – சங்கீதம் 63:3; 51:15
6. ஆனந்தக் களிப்புடன் – சங் 63:3, 2 நாளா. 29:30
7. ஆவியோடும், கருத்தோடும் – 1 கொரி. 14:15; சங். 47:7
8. இசைக் கருவிகளோடு – சங்கீதம் 150:3-5

# 100 நாட்கள் சிறப்பு ஜெபம்

**செப்டம்பர் 6 முதல் டிசம்பர் 14 வரை**

# PRAISE THE LORD

**- Rev. Jerry Daniel**

Dearly beloved, Greetings in Jesus' matchless name! Our God is worthy of our praise (Psalm 18:3). The Bible says that God has formed us that we may declare his praises (Isaiah 43:21). Praise gives glory to God and opens us up to a deeper union with Him. When we praise God, we acknowledge who he is and what he has done in our lives. Psalmist David says, "I will praise the Lord at all times. His Praise shall continually be in my mouth' (Psalm 34:1). He further says in Psalm 35:28 that his tongue will speak of God's praises all day long. There is power in praise. Let us see from the scriptures what praise can do in our lives.

## 1. Praise BRINGS Victory

Praise brings victory in our lives. God inhabits the praises of his people (Ps. 22:3). When we praise and worship Him, His presence will descend among us and the presence of God will fill every situation that we are facing and we will experience certain victory in all our problems and difficulties. When King Jehoshaphat was informed that a coalition of enemy armies was advancing toward the palace in such numbers that there was no possibility of surviving the attack, he sought the face of the Lord with all his people. The Lord heard their cry and his answer came quickly through the prophet, "Do not be afraid or dismayed, the battle is mine!" The result was that they advanced toward that army with the sole weapon of praise, a one-line chorus singing, 'Give thanks to the Lord, for his love endures forever'. As they began to praise the Lord, the Lord caused the enemies to fight each other and destroy themselves (2 Chronicles 20:19-26).

This is the same victory the Lord wants to give to us when we came before Him in praise and worship. When we offer God our praise, we are causing Him to arise in our midst and put to flight the spiritual hosts of wickedness that are trying to defeat us.

## 2. Praise BREAKS the Barriers

Praise breaks all the barriers that are standing on the way to our blessings. When Israelites were facing the wall of Jericho as a barrier on their way to the Promised Land, the Lord instructed them to walk silently around the city for six days and on the seventh day they were to make a great shout unto the Lord. Accordingly on the seventh day the people joined together and

made a great shout unto the Lord and the wall of Jericho collapsed to the ground. When we praise and worship the Lord, the walls of resistance will come down and we can enter into the promises of God in our lives (Joshua 6:1-20).

The Lord is a barrier breaker (Micah 2:13). As we sing and make a joyful noise unto him, the presence of God will descend and all the mountainous barriers and problems that are standing on our way will melt like wax and disappear (Ps. 95:1, 2; 97:1-5). Hallelujah!

### 3. Praise BEGETS Freedom

Praise and worship frees us from our bondages. Paul and Silas were beaten repeatedly and bound and put in prison. In the midst of their pain and bondage, they began to praise and worship the Lord and the Lord delivered them in a mighty way (Acts 16:23-26). They did not murmur and complain against God because of their pain and suffering. When we praise and worship the Lord in the midst of our struggles and suffering, we will experience freedom in a supernatural way. The story of Jonah is a very graphic example of what it means to give unto the Lord the sacrifice of praise in the midst of debilitating circumstances. Instead of murmuring and complaining about his situation inside the belly of a whale, Jonah did the right thing. He turned his attention towards God through prayer and praise (Jonah 2:7-9). The Lord commanded the fish to unload the passenger immediately and it promptly vomited Jonah in the dry land. Yes, praise is the preface to freedom and blessing!

### 4. Praise BANISHES the Evil Spirits

Praise and worship brings deliverance from demonic oppression. When Saul was tormented by an evil spirit, they brought David to play the harp before him. David was a worshipper and as he played the harp and worshipped the Lord, the evil spirit would leave Saul and he would be refreshed (1 Samuel 16:14-23). When we praise and worship the Lord, we would experience a deliverance from the oppression of evil spirits. As we put on the garment of praise, we would be delivered from the spirit of heaviness. No exercise or medicine

will cure the ill of discouragement like praise. Depression and praise cannot live in the same heart. They are absolutely incompatible roommates! The constant wearing of the garment of praise will ward off the spirit of fear and doubt and unbelief and we would be filled with a strong faith as we extol the greatness of the Lord (Isaiah 61:1-3).

Dearly beloved, I encourage you to praise your way out of sickness, praise your way out of barrenness, praise your way out of poverty, praise your way out of spiritual dryness. Whatever blessing and breakthrough you are looking for, begin to praise God and see what miracle GOD will perform in your life. Always remember, when praises goes up, God's blessing comes down!

## PSALM 150 AND PRAISE

***The word 'praise' is used thirteen times in this psalm.***

**WHERE should we praise Him?**

Locally and universally, in the temple and in the vast heavens (v. 1). In other words, wherever you are, praise the Lord!

**WHY should we praise Him?**

Because of what He does and who He is (v. 2). The better you know God's character and works, the more you will praise Him and the more you will enjoy praising Him.

**HOW should we praise Him?**

With voices and instruments, including the cymbals, and with our bodies expressing the joy we feel within (vv. 3–5). The whole person should be one living sacrifice that praises the Lord.

**WHO should praise Him?**

"Everything that has breath" (v. 6). When things that do not have breath praise Him (Ps. 148:7–9), we have even more reason to do so! Our breath comes from Him (Acts 17:25), so we ought to use it to praise His name. Breath is the weakest thing we have, but we can devote it to the highest service, praising the Lord.

# IT'S CHRISTMAS TIME



Christmas is a time of undiminished excitement all over the world. It is always associated with gorgeous dress, delicious food, music, celebration and of course the star displayed in every house. Fine! Nothing is so exciting as Christmas season. But if you look at the Bible for the first Christmas, the scene is quite different. So let us consider what Christmas time is all about!

**It's time for GLORIFYING**

The birth of Jesus excited both heaven and earth. A vast multitude of the heavenly host lifted their voices saying, "Glory to God!" (Luke 2:14). The Christmas story is filled with thanksgiving and praise and worship. The wise men came to see the baby Jesus and worshipped Him (Matt. 2:11). Simeon took Jesus in his arms and praised God (Luke 2:27, 28). Anna praised God when she saw Jesus (Luke 2:38). There was great praise and thanksgiving unto God for sending His son into this world. Let us give thanks to the Lord for the indescribable gift of Jesus Christ (2 Cor. 9:15). In this Christmas season, let us adore and worship the Lord Jesus by acknowledging who He is and what He has done for us. Let our souls magnify the Lord and our spirits rejoice in God our Saviour (Luke 1:46, 47)!

**It's a time for GIVING**

God gave His Son to mankind. John 3:16 tells us that God loved us and 'gave His only begotten Son' for us. He came to give His life as a ransom for many (Matthew 20:28). He came to shed His blood for the forgiveness of sin for mankind. He came to give us the gift of eternal life and abundant life (John 10:10).

When we understand the magnitude of God's gift for us, we cannot but give ourselves to Him. The Shepherds (Luke 2:8-18) and the wise Men (Matthew 2:1-12) gave themselves to the Lord when they heard about the saviour and the King who was born for them. Just imagine what you and I can give God, who has everything? First and foremost, He wants our hearts! (Proverbs 23:26; Revelation 3:20). Have you given your heart to the Lord? If not, there is no better time than today to make that happen (II Corinthians 6:2). Let Christ be the king of our hearts!

The spirit of Christmas is a spirit of giving. The wise men brought precious gifts to Jesus and presented them to Him. Let us also demonstrate our love for God in giving ourselves and ours to Him and to the others! Jesus taught that 'it is more blessed to give than to receive' (Acts 20:35). Remember the poor and the needy (Gal. 2:10). May we decide to be contributors to the well- being of those around us.

**It's a time for GOOD NEWS**

The message of Christmas is a message of "good news" This good news is a good news of salvation and hope for ALL people (Luke2:10). Understanding the importance of this message, the shepherds spread it far and wide (Luke 2:17). We are talking about and preparing for the second coming of Jesus Christ. But thousands in our city are unaware of His first coming. Have you spoken to at least one non-Christian this year about Jesus Christ? Decide to share the love of Jesus with those who have never heard about first Christmas. Ask God to lay in your heart one person who needs to hear the good news of Jesus in this season. And ask him to for an opportunity to show the love of God to that person. If you don't feel that you are able to tell them how to know Christ, then invite them to the church on any Sunday. Make the Christmas season a time of evangelism. Our mess age needs the message of glad tidings desperately!


## NEW YEAR BLESSING SERVICES
## புது வருட ஆசீர்வாத ஆராதனைகள்
## 2020

**டிசம்பர் 31**
இரவு 10.00 மணி

இடம்
**ரோஷன் மஹால்**
மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி.

இடம்
**சிட்டி ரிவைவல் ஏ.ஜி சர்ச்**
ஜென்னி பிளாசா, திருச்சி-1. (English - தமிழ்)

**ஜனவரி 01**
காலை 8.00 மணி

# Special Days and Prayer Points

1. **Nov.10 - World Science Day for Peace and Development** - Pray that the rapid development of science and technology would bring peace and growth in the country.
2. **Nov.11 – National Education Day –** Pray for the education of the 35% of Indian population who are illiterate. Bihar with only 47.53% of educated people is the state with highest illiteracy rate in India. Pray for this to change. Pray that the factors that hinder literacy like poverty, child labor, unemployment and adverse family situations to change.
3. **Nov.14 – World Diabetes Day** – around 36.6 crores of people around the world suffer from diabetes. Pray for the deliverance from this disease. It has been found that by 2030, people with diabetes would increase twice as of now. Pray for the awareness and prevention of diabetes among people.
4. **Nov.14 –India's Children's Day** – Pray for the safety and welfare of all the children in India.In India around 22 crores of children are in the school going age; out of which only 10.5 crores are going to school and around 5.75 lakhs of children are indulged in prostitution. Pray for this situation to change. Also pray that the children would not die due to lack of food and medical facilities.
5. **Nov.14 – International Girls Day –** Pray for the problems faced by female children like female infanticide, eve-teasing and sexual harassment etc. and for the safety of women in their work places, and for the love and care of parents for their girl children.
6. **Nov.16 – International day of Tolerance –** Pray for tolerance and love toward fellow human beings to increase.
7. **Nov.19 – World Toilet Day** – about 250 crores of people in the world are without proper toilet facilities. Pray for this basic need to be met.
8. **Nov.19 – International Men's Day** – Pray that the Christian men would be good witnesses through good conduct. Pray for men to be freed from smoking, drinking, drugs, and other unhealthy practices.
9. **Dec.1 – World AIDS Awareness Day** – At present about 40 crore people are affected by AIDS in the whole world. Let us pray that this disease would be prevented. In India 4.58 crore people are affected by AIDS; and in the TamilNadu 8-10 Lakh people are affected. Let us pray that the people would practice holiness in sex.
10. **Dec.2 – World Pollution Prevention Day** - Due to lack of good drinking water, everyday about 14,000 people die. Let us pray for cleanliness in the environment. In India about 1000 children die daily due to stomach upset. Let us pray for clean dietary habits.
11. **Dec.2 – International Day for Abolition of slavery** - Let us pray that kidnapping of girl children and selling them as slaves would disappear in India. About 7 lakh children in the age group of 5-14 in India are sold every year. Pray for the protection of our children.
12. **Dec.3 – World Disabled Day** - According to the survey of the UN, about 65 crore people are disabled in the whole world. Pray for these people. Pray for 5 lakh children in Tamil Nadu who are mentally retarded.

13. **Dec.9 – International Anti-Corruption Day** - Pray that bribery, corruption and disobeying the law and order would disappear.
14. **Dec.10 – Human Rights Day** - Pray that the basic facilities for human beings would not be denied. The Education for all would be implemented, and all would make use of it.
15. **Dec.14 – Indian Navy Day** - Pray for the protection of the people who are guarding in the coastal areas of our nation.
16. **Dec. 25 – Christmas Day** - Pray that everyone in our city and nation will know about Jesus Christ.

## COUNT HIS BLESSINGS AND GIVE THANKS

- "If you own just one Bible, you are abundantly blessed one-third of the world does not have access to even one.
- If you woke up this morning with more health than illness, you are more blessed than a million who will not survive the week.
- If you have never experienced the danger of battle, the loneliness of imprisonment, the agony of torture or the pangs of starvation, you are ahead of five million people around the world.
- If you attend a church meeting without fear of harassment, arrest or torture of death, you are more blessed that almost three billion people in the world.
- If you have food in your refrigerator, clothes on your back, roof over your head and a place to sleep, you are richer than 75% of this world.
- If you prayed yesterday and today, you are in the minority because you believe in God's willingness to hear and answer prayer.
- If you can read this message, you are more blessed than over two billion people in the world that cannot read anything at all."

## கிறிஸ்துமஸ் ஆராதனைகள்

## CHRISTMAS SERVICES

| டிசம்பர் 24 | டிசம்பர் 25 |
|---|---|
| **செவ்வாய்கிழமை** | **புதன் கிழமை** |
| இரவு 10.30 மணி முதல் 1.00 மணி வரை | காலை 7.00 மணி முதல் 9.30 மணி வரை |
| (தமிழ்) | (English - தமிழ்) |

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH** *Time :* **10.00 a.m to 1.00 p.m**
*Days :* **Tuesday & Saturday** **4.00 p.m to 6.00 p.m**

**Contact : 98438 51115, 99425 33383**

**We are happy to announce that three marriages have been fixed so far through Agape Marriage Ministry of our Church. Glory to God!**

தேவனுடைய கிருபையால் அகாபே திருமண தகவல் ஊழியத்தின் மூலமாய் இதுவரை மூன்று திருமணங்கள் ஒழுங்காகியிருக்கிறது. தேவனுக்கே மகிமை!



# MUSIC CLASS

இசைப் பயிற்சி வகுப்பு

@

## City Revival AG Church

Cantonment, Jenne Plaza, Trichy - 1.

*EVERY TUESDAY 6.00 PM TO 8.00 PM*

Conducted by : ***TRINITY SCHOOL OF MUSIC***

**Key Board, Guitar, Rhythm pad & Drums**

**Contact : 9443119169**



# BIBLE STUDY

## வேதப்பாடம்

**ஒவ்வொரு ஞாயிறு மாலை 6.30 மணிக்கு**

## Every Sunday @ 6.30 p.m

தலைப்பு : **வேதாகம உபதேசங்கள்**

Topic : **BIBLE DOCTRINES**

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

| | |
|---|---|
| A/c Name | : City Revival AG Church |
| A/c Number | : 35354599169 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| IFSC Code | : SBIN0000930 |

| | |
|---|---|
| A/c Name | : City Revival AG Church |
| A/c Number | : 1196172000007824 |
| Bank Name | : KARUR VYSYA BANK |
| IFSC Code | : KVBL0001196 |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 2nd Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |
| Music Class | Tuesday - செவ்வாய்<br>6.00 p.m - 8.00 p.m | இசை வகுப்புகள் |

## Deliverance Fasting Prayer - விடுதலை உபவாச ஜெபம்

**இரண்டாம் சனிக்கிழமை**

**காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை**

*பாவம், சாபம், வியாதி, கடன், பில்லிசூனியம் ஆகிய கட்டுகளிலிருக்கிறவர்களை அழைத்து வாருங்கள். இயேசு அற்புதம் செய்வார்! இயேசு விடுதலை தருவார்!*

***அனுமதி இலவசம்! மதிய உணவு உண்டு!***

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

# PRAISE & WORSHIP SERVICES

## EVERY SUNDAY

**Tamil Service** - 7.00 a.m, 11.00 a.m
**English Service** - 9.00 a.m
**Evening Service** - 6.30 p.m

## ஞாயிறு தோறும்

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

*Come with your friends & family & Receive the blessings of God*



**Sunday School is conducted for kids below 14 years**





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org